DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**MCOP.No.9/2022**

| | | | |
|---|---|---|---|
| Name | : | முத்தையா | **Pw2** |
| Father's Name | : | | |
| Village | : | | |
| Taluk | : | | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24th day of January 2024.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர் தரப்பில் 2 வது சாட்சி ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் உண்மை. எனது ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

காவல் நிலையத்தில் நான் புகார் அளிக்கவில்லை. விபத்து சம்பந்தமாக யார் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்கள் மற்றும் என்ன விபரம் கூறியிருக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. இந்த விபத்து சம்பந்தமாக இந்த நீதிமன்றத்தைத் தவிர வேறு எந்த நீதிமன்றத்திலும் நான் சாட்சியம் அளிக்கவில்லை. விபத்து குற்ற வழக்கு சம்பந்தமாக போலீசார் சாட்சிப் பட்டியலில் என்னை 3 வது சாட்சியாக சேர்த்திருக்கிறார்கள். விபத்தில்இறந்தவர் என்னுடைய ஊர்க்காரர். சிறு வயதில் இருந்தே அவரை எனக்கு தெரியும். விபத்து நடந்த ரோடானது திருநெல்வேலி–தென்காசி பிரதான சாலை என்றால் சரிதான். இறந்தவர் சென்ற இருசக்கர

வாகனத்தின் பதிவு எண் எனக்கு தெரியாது. அவர் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வந்துகொண்டிருந்தார். மோதிய வாகனம் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்தது. வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்த இருசக்கர வாகனம் யோவான் சென்ற வாகனத்தை உரசியது. அவ்வாறு உரசியதில் யோவான் சென்ற இருசக்கர வாகனம் நிலை தடுமாறியது என்றால் சரிதான். வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்த இருசக்கர வாகனம் யோவான் மீது மோதாமல் இருந்திருந்தால் இந்த விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரிதான். தென்காசி–திருநெல்வேலி சாலையில் போக்குவரத்தும், பொதுமக்களும் அதிகமாக வந்து செல்லும் சாலை என்றால் சரிதான். புகார் அளித்தவர் யோவான் தலைக்கவசம் அணிந்திருந்தார் என்று கூறியிருக்கிறாரா என்று எனக்கு தெரியாது. யோவான் தலைக்கவசம் அணிந்திருந்தார். இந்த விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றும், நேரில் பார்க்காத விபத்தை பார்த்ததாக மனுதாரர்களுக்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு முழு காரணமும் இறந்தவரின் அதிகவேகமும் மற்றும் டிஎன் 76 பிஇ 1721 பதிவெண் கொண்ட வாகனத்தின் அதிகவேகமும், அஜாக்கிரதையும் தான் காரணம் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்த நபரின் குடும்பத்தினருக்கு அதிக இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் அதனால் என்னுடைய சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல.

<u>6 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

இந்த விபத்திற்கு முழு காரணம் டிஎன் 76 பி 3312 எண் கொண்ட டாடா தோஸ்த் என்ற வாகனம் தான் என்றால் சரிதான். இந்த வாகனம் யோவான் மீது மோதவில்லை என்றால் இந்த விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரிதான். இந்த விபத்திற்கு டிஎன் 76 பிஇ 1721 பதிவெண் கொண்ட வாகனம் எந்த விதத்திலும் காரணமில்லை என்றால் சரிதான். விபத்தில் இறந்த யோவானும் இந்த விபத்திற்கு காரணமல்ல என்றால் சரிதான். இந்த விபத்து சம்பந்தப்பட்ட முதல் தகவல் அறிக்கை, குற்றப்பத்திரிக்கை டாடா தோஸ்த் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநர் மீதுதான் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். டாடா தோஸ்த் வாகனத்தை ஓட்டிய நபர் கவனமாகவும், சாலை விதிகளை மதித்தும் ஓட்டியிருந்தால் இந்த விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரிதான்.

<u>7 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

முதல் தகவல் அறிக்கையில் நானும், செல்வராஜ் என்பவரும் தான் காயம்பட்ட

நபரை 108 ஆம்புலன்ஸ் மூலம் அழைத்துச் சென்றதாகக் கூறப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். நான் பார்க்கும் போது யோவான் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி சாலை விதிகளை கடைபிடித்து தான் ஓட்டி வந்தார் என்றால் சரிதான். டாடா தோஸ்த் வாகனம் அதிவேகமான சரக்கு வாகனம் என்றால் சரிதான். அன்றைய தினம் டிஎன் 76 பி 3312 பதிவெண் கொண்ட டாடா தோஸ்த் வாகனம் தான் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வந்து யோவான் மீது மோதி அவரின் தலையின் காயம் ஏற்படுத்தியது என்றால் சரிதான். அதனால் யோவானின் இறப்பிற்கு டாடா தோஸ்த் வாகனத்தை ஒட்டிய ஓட்டுநர் தான் காரணம் என்றால் சரிதான். அன்றைய தினம் நான் காயம் பட்ட நபரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று விபத்தை நேரில் பார்த்ததால் சாட்சியம் அளிக்கிறேன். இந்த விபத்திற்கு யோவான் காரணமல்ல என்றால் சரிதான்.

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2024.01.24 16:50:57 +0530

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,
TENKASI.

**MCOP.No.9/2022**

| | | | |
|---|---|---|---|
| Name | : | செல்வராஜ் | **Pw3** |
| Father's Name | : | | |
| Village | : | | |
| Taluk | : | | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24th day of January 2024.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர் தரப்பில் 3 வது சாட்சி ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் உண்மை. எனது ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

காவல் நிலையத்தில் நான் புகார் அளிக்கவில்லை. விபத்து சம்பந்தமாக யார் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்கள் மற்றும் என்ன விபரம் கூறியிருக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. இந்த விபத்து சம்பந்தமாக இந்த நீதிமன்றத்தைத் தவிர வேறு எந்த நீதிமன்றத்திலும் நான் சாட்சியம் அளிக்கவில்லை. விபத்து குற்ற வழக்கு சம்பந்தமாக போலீசார் சாட்சிப் பட்டியலில் என்னை 3 வது சாட்சியாக சேர்த்திருக்கிறார்கள். விபத்தில்இறந்தவர் என்னுடைய ஊர்க்காரர். சிறு வயதில் இருந்தே அவரை எனக்கு தெரியும். விபத்து நடந்த ரோடானது திருநெல்வேலி– தென்காசி பிரதான சாலை என்றால் சரிதான். இறந்தவர் சென்ற இருசக்கர

வாகனத்தின் பதிவு எண் எனக்கு தெரியாது. அவர் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வந்துகொண்டிருந்தார். மோதிய வாகனம் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்தது. வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்த இருசக்கர வாகனம் யோவான் சென்ற வாகனத்தை உரசியது. அவ்வாறு உரசியதில் யோவான் சென்ற இருசக்கர வாகனம் நிலை தடுமாறியது என்றால் சரிதான். வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்த இருசக்கர வாகனம் யோவான் மீது மோதாமல் இருந்திருந்தால் இந்த விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரிதான். தென்காசி–திருநெல்வேலி சாலையில் போக்குவரத்தும், பொதுமக்களும் அதிகமாக வந்து செல்லும் சாலை என்றால் சரிதான். புகார் அளித்தவர் யோவான் தலைக்கவசம் அணிந்திருந்தார் என்று கூறியிருக்கிறாரா என்று எனக்கு தெரியாது. யோவான் தலைக்கவசம் அணிந்திருந்தார். இந்த விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றும், நேரில் பார்க்காத விபத்தை பார்த்ததாக மனுதாரர்களுக்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு முழு காரணமும் இறந்தவரின் அதிகவேகமும் மற்றும் டிஎன் 76 பிஇ 1721 பதிவெண் கொண்ட வாகனத்தின் அதிகவேகமும், அஜாக்கிரதையும் தான் காரணம் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்த நபரின் குடும்பத்தினருக்கு அதிக இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் அதனால் என்னுடைய சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல.

**<u>6 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

இந்த விபத்திற்கு முழு காரணம் டிஎன் 76 பி 3312 எண் கொண்ட டாடா தோஸ்த் என்ற வாகனம் தான் என்றால் சரிதான். இந்த வாகனம் யோவான் மீது மோதவில்லை என்றால் இந்த விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரிதான். இந்த விபத்திற்கு டிஎன் 76 பிஇ 1721 பதிவெண் கொண்ட வாகனம் எந்த விதத்திலும் காரணமில்லை என்றால் சரிதான். விபத்தில் இறந்த யோவானும் இந்த விபத்திற்கு காரணமல்ல என்றால் சரிதான். இந்த விபத்து சம்பந்தப்பட்ட முதல் தகவல் அறிக்கை, குற்றப்பத்திரிக்கை டாடா தோஸ்த் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநர் மீதுதான் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். டாடா தோஸ்த் வாகனத்தை ஓட்டிய நபர் கவனமாகவும், சாலை விதிகளை மதித்தும் ஓட்டியிருந்தால் இந்த விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரிதான்.

**<u>7 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

முதல் தகவல் அறிக்கையில் நானும், செல்வராஜ் என்பவரும் தான் காயம்பட்ட

நபரை 108 ஆம்புலன்ஸ் மூலம் அழைத்துச் சென்றதாகக் கூறப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். நான் பார்க்கும் போது யோவான் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி சாலை விதிகளை கடைபிடித்து தான் ஓட்டி வந்தார் என்றால் சரிதான். டாடா தோஸ்த் வாகனம் அதிவேகமான சரக்கு வாகனம் என்றால் சரிதான். அன்றைய தினம் டிஎன் 76 பி 3312 பதிவெண் கொண்ட டாடா தோஸ்த் வாகனம் தான் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வந்து யோவான் மீது மோதி அவரின் தலையின் காயம் ஏற்படுத்தியது என்றால் சரிதான். அதனால் யோவானின் இறப்பிற்கு டாடா தோஸ்த் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநர் தான் காரணம் என்றால் சரிதான். அன்றைய தினம் நான் காயம் பட்ட நபரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று விபத்தை நேரில் பார்த்ததால் சாட்சியம் அளிக்கிறேன். இந்த விபத்திற்கு யோவான் காரணமல்ல என்றால் சரிதான்.

G ANURADHA

Digitally signed by G ANURADHA
Date: 2024.01.24 16:51:07 +0530